## 4. விறுவிறுப்பாக விளக்குதல்: பலவிதமானவை

4 - 9 ஆந் தரம் | 35 மணித்துளிகள்

கருவிகள்:
முடியுமாயின், கருப்பொருள்/தலைப்பு உடனான, பகிரக்கூடிய ஒரு படக் கதை. (வலம் பார்க்கவும்)

- வாய்மொழி முன்னேற்பாடு: "கவர்ச்சியான" மற்றும் "சலிப்பான" சொற்கூறுகள் பற்றிக் கலந்துரையாடல். இப்பிரிவுகள் உண்மையில் எதனைக் கருதுகின்றன; எங்கள் எழுத்துத் தொடர்பாக என்ன தொடர்பினை ஏற்படுத்துகின்றன? ஒருங்கிணைப்புச் செயற்பாடு: ஆசிரியர் வகுப்புக்கு ஒரு (சிறிய) கவர்ச்சியான கதையையும் ஒரு சலிப்பான எழுத்துருவினையும் படிக்கிறார் (அல்லது எழுத்தில் கொடுக்கிறார்). ஒன்றினை கவர்ச்சியானதாகவும் மற்றதைச் சலிப்பாகவும் ஆக்குவது என்ன? ஆய்வு: சலிப்புள்ள எழுத்துருவை எப்படி மிகக் கவர்ச்சிகரமாக ஆக்கலாம்? எழுத்துருவை இன்னும் கவர்ச்சியாக ஆக்குதற்கு மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்குக, பின்னர் உங்கள் வேலையை ஒப்பிடுக.
- கவர்ச்சி எழுத்துக்கான பின்வரும் "செய்முறை" யை (ஒரு துண்டுப்பிரசுரமாக) மாணவர்கள் பெற்றுக்கொள்வர்:
  - படிப்பவர்களின் கவனத்தைக் கவரும் வகையான வாக்கியத்துடன் உங்கள் எழுத்துருவினைத் தொடக்குக (எ.கா. "அன்றைக்கு எல்லாமே பிழையாகப்போய்விட்டது", "அச்சமடைந்த நாய் என் அருகில், மிகவும் அருகில் வந்தது")
  - எல்லாவற்றையும் ஒரேயடியாக வெளியிடவேண்டாம். படிப்பவர்களுக்குத் தொடக்கத்தில் அவர்களின் விருப்பினை உருவாக்கச் சில தடயங்களை மட்டும் கொடுக்கவும்! ("இன்று நான் பெற்ற பட்டறிவினை, விரைவில் நான் மறக்கமாட்டேன். அது ஓர் பயங்கரமான விலங்கினை விடக் கொடியதான ஒன்றுடன் தொடர்புற்றது")
  - உங்கள் எழுத்துருவில் ஆளின் உணர்வுகள், அச்சங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை விவரிக்கவும். ("அச்சத்துடன் நடுங்கிய அவள் எண்ணினாள்:" என்னைக் காப்பாற்றுதற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா?)
  - உங்கள் எழுத்துருவில் படிப்பவர்களை நேரடியாக விளித்து வினாக்களால் குறுக்கிடுக. (எடுத்துக்காட்டு: "இத்தகைய அச்சமூட்டும் நிலைமையில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?")
  - மிகுந்த உணர்வூட்டும் பகுதியை அல்லது விளைவினை கதையின் முடிவை அண்மிக்கும்வரை கட்டி எழுப்பவும்.
  - படிப்பவரைக் கிளர்ச்சியுறச் செய்யக்கூடிய ஓர் உணர்வூட்டும் ஒரு தலைப்பினை உங்கள் எழுத்துருவுக்கு எண்ணுக, பின்வருமாறு ("துருக்கியில் ஓர் இடர்", அல்லது "புலி என்னைத் தின்னப்போகின்றதா?").

மாணவர்களுக்கு தற்போது கதைகளுக்கான ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட புறக்குறிப்புகள் வழங்கப்படுகின்றன. அவற்றால், இச் "செய்முறை" யைப் பின்பற்றி, கவர்ச்சிகரமான எழுத்துருக்களை அவர்கள் எழுதவேண்டும். எடுத்துக்காட்டு: ஒரு பொருத்தமான படக்கதை; தலைப்பு "ஓர் அதிர்ச்சிப் பட்டறிவு" அல்லது "அப்பொழுது நான் உண்மையாக அச்சமடைந்தேன்". எழுத்துருக்களை எழுதிய பின்னர், மாணவர்கள் அவற்றைப் படித்து ஒப்பிட்டு "செய்முறை" எவ்வாறு நன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கலந்துரையாடவும்.

- மாணவர்கள் கவர்ச்சியான தலைப்புப்பொருள்கள், தலைப்புத்தொடர்கள் மற்றும்/அல்லது வாக்கியத் தொடக்கிகள் (1 – 3 வாக்கியங்கள்) ஆகியனவற்றின் திரட்டினை உருவாக்குகின்றனர். அவற்றுடன் இணைந்த எழுத்துருக்களை அவர்கள் வகுப்பில் அல்லது வீட்டு ஒப்படையாக எழுதுவர். இவ்வாறு திரட்டப்பெற்ற எழுத்துருக்களை கம்பியால் இணைத்து அல்லது கட்டி நூலாக ஆக்கலாம். ("எங்கள் திகிலூட்டும் கதைகள்", "உணர்வூட்டும் கதைகள", முதலியன).